# மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

# கும்முடிப்பூண்டி

| | | |
|---|---|---|
| வழக்கு எண்: C.C. 66 / 2023 | காவல் நிலையம்– பாதிரிவேடு | |
| பெயர் : சந்திரபாபு | அ.சா.4 | நாள் : 10.09.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.4 என்பவரின் வாக்குமூலம் 1969ஆம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.S.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சந்திரபாபு | தாலுக்கா | : | கும்மிடிப்பூண்டி |
| தந்தை பெயர் | : | வெங்கடசாமி | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | கயடை | வயது | : | 43 |

( எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் கயடை கிராமத்தில் பூர்விகமாக வசித்து வருகிறேன். நான் வெல்டிங் கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

**(சாட்சியை <u>பிறழ் சாட்சியாக</u> கருதவேண்டும் என்று அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆவணங்களை பரீசிலித்து அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 15.07.2018ம் தேதி இரவு 8 மணியளவில் ஆஜர் எதிரியானவர் எங்களை ஊரை சேர்ந்த திருமலை என்பவரை தகாத வார்த்தைகளால் திட்டி கொண்டிருந்தார் என்றும், அப்போது சுகுந்தன் என்பவர் ஆஜர் எதிரியை பார்த்து ஏன் திட்டுகிறிர்கள் என்று கேட்டார் என்றும், அப்போது ஆஜர் எதிரியானவர் திருமலை மற்றும் சுகுந்தனை கட்டையால் அவருடைய தலையில் தாக்கினார் என்றும்,அந்த தாக்குதலில் திருமலையின் காதில் இரத்தம் வந்தது என்றும், அவருடைய 2 பற்களும் கழண்டு விட்டது என்றும், அதன் காரணமாக மேற்படி திருமலை பொன்னேரி பொன்னேரி அரசு மருத்துவமனை மற்றும் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்து கொண்டார் என்றும், பின்னர் திருமலை இது சம்பந்தமாக பாதிரிவேடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், அது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு

தற்சமயம் எதிரிக்கு சாதகமாக இவ்வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/– சந்திரபாபு

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

R. Senthil Kumar, M.A., B.L.,
Digitally signed by R. Senthil Kumar, M.A., B.L.,
Date: 2025.09.10 12:40:14 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி